Vol.26 | No. 4 | April 2022



The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



Vincent de Paul, Golden Jubilee Inauguration, Padanthalumoodu, 13.3.2022








Matru Jyotis, Women's Day, Soosaipuram, 8.3.2022



Health Commission, Health Awareness, Sangamam, 21.3.2022




St. Mary's Minor Seminary, Home Day, Online, 11.03.2022



KKSSS, Education Scholarship, Kalluvilai, 10.03.2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :4 APRIL 2022



# இறையருள்
# IRAIARUL


## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 06 |
| Decree - Safe Environment | 11 |
| மறைக்கல்வி | 12 |
| மிஷன் லீக் | 18 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 19 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 20 |
| இளையோர் கல்விப் பணியகம் (TYES) | 22 |
| இல்வாழ்வு இயக்கம் | 24 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 27 |
| சமூக சேவை சங்கம் (KKSSS) | 29 |
| மறைமாவட்ட செய்திகள் | 35 |
| மறைவட்ட செய்திகள் | 37 |
| Bishop's Engagements | 50 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/132/2022**

**31 March 2022**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckalay!

On 14 April 2022, we commemorate Holy Thursday. It is the memorial of the Last Supper of Jesus Christ, when he established the sacrament of Holy Communion prior to his arrest and crucifixion. It also commemorates his institution of the priesthood. Except for the resurrection on Easter, Holy Thursday is possibly one of the most important, complex, and profound days of celebration in the Catholic Church. Holy Thursday celebrates the institution of the Eucharist as the true body and blood of Jesus Christ and the institution of the sacrament of the priesthood.

On this occasion, as priests, it is a wonderful opportunity for us to reflect briefly on the theme of priesthood. According to the Letter to Hebrews, Christ offered the perfect obedience and made the perfect self-sacrifice. This makes him the high priest to end all high priests. Priesthood pertains first to Christ.

Yet elsewhere in the New Testament, like in the First Letter of St Peter and in the book of Revelation, the people of God are explicitly called priests, and priestly language is used of them in various other places. St Paul asks the Roman Christians to present their bodies as living sacrifices, holy and acceptable to God, which is their spiritual worship (Romans 12:1). The writer of the First Letter of St Peter calls his hearers 'a royal priesthood, a holy

nation, God’s own people’ (1 Peter 2:9), echoing very clearly a passage from Exodus: ‘Now therefore, if you obey my voice and keep my covenant, you shall be my treasured possession out of all the peoples. Indeed, the whole earth is mine, but you shall be for me a priestly kingdom and a holy nation’ (Exodus 19:5–6a). Thus, priesthood pertains second to the people of God or the Church.

In one place in the New Testament, the work of a kind of ‘minister’ is referred to as specifically ‘priestly.’ In Romans, St Paul refers to ‘the priestly service of the gospel of God’ (Romans 15:16). He seems to be implying that the work of an evangelist is ‘priestly’ in a special way. The priesthood of the people of God is related directly to Christ’s priesthood. The people of God are the body of Christ, and in a sense continue Christ’s ministry in the world, through the Holy Spirit. In that way, they share in his priesthood. But what of the third type, the ordained priesthood?

It should be remembered that the Church has two basic types of sacramental ordination: diaconal and priestly. They both make people into sacraments, material means of encountering God, and they do so for the building up of the Church. In Ephesians 4:7–16, St Paul describes the specific ministries in the Church as ‘ligaments’ which knit the body together.

Those who are ordained deacons reveal Christ through service: they are sacraments of ‘Christ the servant,’ making Christ’s diaconal ministry present to the people of God so as to enable them to realize their status as servants, both of the Gospel (Ephesians 3:7) and of each other (John 13:13–15). Those who are ordained priests reveal Christ through priesthood: they are sacraments of ‘Christ the priest,’ making Christ’s priestly ministry present to the people of God so as to enable them to realize their status as priests.

The ordained priesthood is thus a link between the other two types of priesthood, the priesthood of Christ and the priesthood of the people of God. It is derived from the one and helps to realize the other. At the consummation of the kingdom of God, when the royal priesthood will be fully realized, there will be no need for sacraments, including ordained priests.

The ordained priest, through being a sacrament of Christ's priesthood, enables the people of God to realize their priesthood. The Eucharist is where these three types of priesthood come together. The Eucharist is a liturgical anamnesis of Christ's great sacrifice, a liturgy that recalls it and makes its effects present. These effects are the establishment of a new covenant and the formation of a new people, a 'kingdom of priests.' In the Eucharist, the people symbolically sacrifice themselves in the 'gifts' they present at the offertory and they offer themselves as 'a living sacrifice' for the coming week. In this way, the Eucharist aims to unite their self-sacrifice with Christ's, that is, to make them more fully the priests they are called to be, and in so doing to build up the Church.

As the function of the ordained priest is to enable and to encourage the people to realize their priesthood, it is appropriate that the ordained priest should preside at the liturgy where Christ's self-sacrifice is recalled, and where the people unite themselves to this sacrifice, going out to live lives of self-sacrifice in the world. The Eucharist sums up the purpose of the ordained priest, namely, building up the Church.

Priesthood is not synonymous with leadership, and certainly not with being an incumbent. A priest may have particular responsibilities in one part of the Church, but whatever his job, his role is to reveal Christ's priesthood and build up the royal priesthood of all Christian people.

Priesthood is not unique to the clergy, but they have a key role. They are to manifest Christ's self-sacrifice and to elicit self-sacrifice in the people they serve, looking forward to the day 'when sacraments shall cease,' and they are no longer needed.

Let us remain with Jesus as he washed the feet of his disciples, instituted the Priesthood and Holy Eucharist on this day. Through the simple meal, consisting of bread and wine, he chooses to remain with us forever. Let us listen attentively to the reflections on Holy Thursday and help our people to grasp the importance of this day so that we enter into the Easter Triduum meaningfully!

As I conclude this circular, let me remind you that we are still in the holy season of Lent. We are called upon to spend these days spiritually undertaking the disciplines prayer, fasting and almsgiving in a meaningful way. Let us not lose the fervour of this season and not deprive ourselves of the graces that this holy season brings. During this period, even as we discipline our bodies through self-denial and fasting, let us give emphasis on embodying the values we preach. Let us emphasize on God's love, and how we need to embody this love in our own ministries. Love consists not in limiting God by our human equations of love, but by allowing God's infinite love to utterly redefine our own. Let us also prepare ourselves to enter into the holiest week in the Catholic Calendar with the celebration of the Palm Sunday on 10 April 2022. May the commemoration of the passion, death and resurrection of Jesus enable us to become shepherds after the heart of the Good Shepherd who willingly laid down his life for his sheep!.

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular Letter No/GR/38/2022**

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

இந்திய கத்தோலிக்க ஆயர்பேரவை (CBCI), சீரோமலபார் ஆயர்பேரவை ஆகியவற்றில் கலந்து ஆலோசித்ததின்படியும் நம்முடைய உயர்பேராயரின் அறிவுறுத்துதலின்படியும் உருவாக்கப்பட்ட (Diocesan Safe Environment Committee) பாதுகாப்பானச் (பணி மற்றும் சேவை) சூழலுக்கான மறைமாவட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின் தலைமை அலுவலகம் கல்லுவிளையில் அமைந்துள்ளது. இவ்வலுவலகம் அனைத்து சனிக்கிழமைகளிலும் காலை 10 மணி முதல் 12 மணி வரை செயல்படும். இக்குழுவின் மிக முக்கிய மூன்று பணிகள்:

திருச்சபையின் அனைத்து மக்களுக்கும் குறிப்பாக சிறார்களுக்கும் (வயதுவரம்பு அடையாதவர்கள்) வயது வந்தோருக்கும் (வயதுக்கு வந்தும் அதற்கு ஏற்றாற்போல் செயல்பட இயலாதவர்கள்) எதிராக இழைக்கப்படும் பாலியல் சீண்டல்களையும் துன்புறுத்தல்களையும் பற்றித் திருச்சபை மற்றும் அரசு சார்ந்த சட்டகோட்பாடுகளின் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் இக்குழுவின் பணியாக உள்ளது. இதன் அடிப்படையில் அவ்வப்போது முன்குறிக்கப்பட்ட இடங்களில் வைத்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வகுப்பில் பங்கேற்பவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட வயதினரோடு பழகும்போது திருச்சபையின் பணியாளர்கள் கடைபிடிக்கவேண்டிய ஒருசில வரம்புகள் உள்ளன. அவ்வரம்புகளை மீறினாலோ, வரம்புகள் மீறப்படும் போது, தனது கடமைகளை நிறைவேற்ற தவறினாலோ சட்டரீதியான விளைவுகளை சந்திக்கநேரிடும்

என்ற முன்னறிவிப்பையும் விழிப்புணர்வையும் வழங்குவது இத்தகைய பயிற்சிவகுப்புகளின் நோக்கமாக உள்ளது. எனவே அருள்பணியாளர்களை உள்ளடக்கிய, திருச்சபைப் பணிக்கு அழைக்கப்பட்ட அனைவரும் கண்டிப்பாக இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் இவ்வமைப்பு சார்ந்த காரியங்களில் இயக்குனரின் அறிவுரைகளை அனைத்து திருச்சபை பணியாளர்களும் கடைபிடிக்க கடமைப் பட்டவர்கள். இத்தகைய பயிற்சி வகுப்புகளில் பங்கேற்று சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத திருச்சபைப் பணியாளர்கள் தங்கள் பணிகளில் தொடர்வதில் சிரமம் ஏற்படும்.

வயதுவராதவர்களுக்கும் வயது வந்தும் அதற்கு ஏற்றாற்போல் செயல்பட இயலாதவர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் பாலியல் தொல்லை எப்போதும் உடல்ரீதியாக இருக்கவேண்டுமென்று இல்லை. இதில் சட்டபூர்வமாக குற்றவியல் பிரிவில் வேறு பல காரியங்களும் உட்படும். அதுமட்டுமல்ல வயது வராதவர்கள் என்ற சொல்லில் 18 வயது நிறைவடையாதவர்கள் மட்டுமல்ல பாலியல் தொல்லைகளை தடுக்க இயலாத அனைவரும் உட்படுவர்.

இக்குழுவின் இரண்டாவது நோக்கம் வயதுக்கு வராதவர்களுக்கும் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு நிகரானவர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் பாலியல் தொடர்பான துன்புறுத்தல்களைப் பற்றிய புகார்களைப் பெற்று தகுந்த நடவடிக்கை எடுப்பதாகும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் இயக்குநரிடமிருந்து சம்மண் பெறும் போது, குற்றம் சாட்டப்பட்டவர் அதை உதாசீனப்படுத்தாமல் அதற்கு ஏற்றார் போல் செயல்பட வேண்டும். இதுதொடர்பாக வருகின்ற அறிவீனமும் அலட்சிய போக்குகளும் பதில்களும் மேல் நடவடிக்கைகளுக்கு வழிகோலும். மேலும் இயக்குனர் குழுவால் நியமிக்கின்ற துணைக்குழு புகார்களை விசாரித்து அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும். இக்காரியத்தில் குறுக்கிட கானோனிக (திருச்சபை சட்ட வல்லுநர்கள்) குழுவிற்கும் அதிகாரம் கிடையாது. ஏனெனில் இவ்வமைப்பு அரசாங்க சட்டத்தின் நெறிமுறைகளுக்கு ஏற்ப செயல்படுவதால் இதன் தீர்மானங்களை புறக்கணிக்க இயலாது.

வயதுக்கு வந்தும் அதற்கு ஏற்றாற்போல் செயல்பட இயலாதவர்கள் எனும் போது, நம்முடைய மேய்ப்புப் பணிக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அனைவரும் அதில் உள்ளடங்குவர். அதைப்போன்று பாலியல் தொல்லை எனும் போது உடல்ரீதியானதும் பிறவகையானதுமான துன்புறுத்தல்களும் அடங்கும். திருச்சபையிலும் சமூகத்திலும் துன்புறுத்தல்களை அனுபவிக்கும் பெண்கள்

வயதிற்கு வந்தும் அதற்கு ஏற்றார்போல் செயல்பட இயலாதவர்கள் என்று வகைப்படுத்தப்படுகிறார்கள். நம்முடைய சமூகத்தில் பெண்கள் அனுபவிக்கும் பாகுபாடுகளும் துன்புறுத்தல்களும் மிகவும் கவனிக்கத்தக்கது. நமது அரசானது இவ்வகையான சூழலை எதிர்கொள்ள பற்பல சட்டங்களை இயற்றியுள்ளது. திருச்சபையிலும் அதற்கான பலகொள்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய புகார்கள் மீது இச்சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். தவறானமுறையில் அதிகாரத்தை பயன்படுத்தி வலுவற்றவர்களை சுரண்டுதல் என்பது திருச்சபை பணியாளர்கள் குறிப்பாக குருக்களுக்கு எதிராக வைக்கப்படும் ஒரு முக்கியமான குற்றச்சாட்டாக உள்ளது. அதில் முதன்மையானது பாலியல் தொல்லைகளும் துன்புறுத்தல்களும் ஆகும். மக்கள் கொண்டிருக்கும் அருட்பணியாளர்களைப் பற்றிய மதிப்பு, அவர்கள் கொண்டிருப்பதாக கருதப்படும் இறைத்தன்மை, அவர்களை எதிர்த்தால் கிடைப்பதாகக் நம்பப்படும் கடவுளின் தண்டனை ஆகியவை இத்தகைய துன்புறுத்தல்கள் மறைக்கப்படுவதற்கான முக்கியமான காரணங்களாக உள்ளன. இவை துன்புறுத்தல்கள் தொடர்வதற்கு எதுவான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கிறது என்பது பொதுவாக முன்வைக்கப்படும் விமர்சமனமாக உள்ளது. அருட்பணியாளர்களுள் ஒருசிலரே இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டாலும் மற்ற நல்ல உள்ளம் கொண்ட அருள்பணியாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் அருட்பணியாளர்களை ஆயர்கள் காப்பாற்றுகிறார்கள் என்பதும் முன்வைக்கப்படும் பிரதான குற்றச்சாட்டாக உள்ளது. இக்குற்றச்சாட்டுகளில் ஓரளவு உண்மைத் தன்மை அடங்கியுள்ளது என்பதை கருத்தில் கொண்டு தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்னும் தீர்மானம் நடைமுறைக்கு வந்துள்ளது. அத்தோடு இது அரசின் சட்டமாகவும் உள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ், அவர்கள் 2019 மார்ச் 19 அன்று வத்திக்கானில் பணி செய்கின்ற கர்தினால்கள் உள்பட அனைவரையும் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்திய சட்டத்தில் இவற்றைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இச்சட்டங்கள் அனைத்து தளங்களிலும் செயல்படக் கூடியவகையில் விரைவில் கொண்டு வரப்படும் என்று அவர் குறிப்பிட்டார். மேலும் சிறார்களையும் பலவீனமானவர்களையும் பாதுகாப்பது திருச்சபை மற்றும் அதன் அனைத்து உறுப்பினர்களிடையவும், நற்செய்தியோடிணைந்த கடமையாக இருக்கிறது என்று திருத்தந்தை எடுத்துரைக்கிறார். மெய்யாகவே கிறிஸ்து மிகச்சிறியோரையும் வலுவற்றோரையும் பாதுகாக்கும்

பணியை நம்மிடம் ஒப்படைத்துள்ளார். “இத்தகைய சிறுபிள்ளை ஒன்றை என்பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்” (மத்தேயு 18:5). ஆகவே வயதுக்கு வராதவர்களையும் அவர்களுக்கு நிகராக பாவிக்கப்படும் வயது வரம்பு அடைந்தவர்களையும் வரவேற்பதும் மதிப்பதும் அவர்களுடைய விருப்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதும் கடமையாக இருக்கிறது. அத்தோடு அவர்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுப்பது நமது கடமையாகவும் உள்ளது. இதற்கு ஆழமான மற்றும் உறுதியான மனமாற்றம் தேவை. தனிப்பட்ட வாழ்வின் புனிதமும் பணி சார்ந்த அர்ப்பணிப்பும் நற்செய்தியோடு காட்டப்படும் நம்பகத்தன்மையும் இதில் அடங்கியுள்ளன. மேலும் கல்விப்பணியை மறுசீரமைப்பது இத்தகைய மனமாற்றத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

எனவே திருச்சபையில் உறுதி செய்யப்பட வேண்டிய சில காரியங்கள் உள்ளன. அவை பின்வருமாறு: வயது வந்தவர்கள் மற்றும் அவர்களுக்கு நிகராக பாவிக்கப்படும் வயது வந்தவர்களின் உரிமைகளையும் தேவைகளையும் அறிந்து அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் ஒரு சமூகம்; உடல் அல்லது மனரீதியிலான வன்முறைகள், சுரண்டல்கள், தவறானப் பயன்பாடு புறக்கணிப்பு, தவறான நடத்தை (அணுகுமுறை), போன்றவற்றை தடுக்கும் ஒரு சமூகம். முறைகேடுகளை சட்ட அதிகாரிகளிடம் முறையிட்டு, அவர்களுடன் இணைந்து இப்பேற்பட்ட குற்றங்களை தடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கும் ஒரு சமூகம். குற்றவாளிகளை நீதிக்கு முன் அழைத்துவந்து வழக்கு தொடர்தல். சுரண்டல்கள், பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது தவறான நடத்தை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் புகார்களை கேட்டு அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்தல். - பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் தேவையான மேய்ப்புப்பணி அளிப்பதோடு, ஆன்மீகம், மருத்துவம், உளவியல் மற்றும் சட்டம் சார்ந்த உதவிகளை வழங்குதல். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நியாயமான பாரபட்சமற்ற விசாரணையும் நீதியின் முன் அவர்களுடைய குற்றம் நிரூபிக்கப்படும்வரை அவர்களுடைய குற்றமின்மையை (நிரபராதித்துவத்தை) நிலைநிறுத்தவும், மேலும் குற்றத்திற்காக அவர்களுக்கு கிடைக்கும் தண்டனை குற்றவிகிதம் சார்ந்து அமையவும் உழைத்தல். குற்றம் சாட்டப்பட்டவர்களை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து அவர்களுக்கு தேவையான மன, ஆன்மீக மற்றும் சமூக மறுவாழ்வு வழங்குதல். பொய்யாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்ப இயன்ற உதவிகளை செய்தல்.

வயதுக்கு வராதவர்கள் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு நிகரானவர்களுடைய பாதுகாப்புக்காக உழைப்பவர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்தல்.

நம்முடைய மறைமாவட்டத்தில் செயல்படும் (Diocesan Safe Environment Committee) இவ்வமைப்பின் மேற்கூறியப் பணிகளை நடைமுறைப்படுத்த இயக்குனரும் செயற்குழுவும் இயன்ற அளவு உதவுவார்கள் என்பதில் ஐயமில்லை .

இச்சுற்றறிக்கை தக்கலை மறைமாவட்ட தலைமை அலுவலகத்திலிருந்து வெளியிடப்படுகிறது. ஆண்டவராகிய ஈசோ மெசியா உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்க[illegible]

ஆயர் இல்லம்
07.02.2022

குறிப்பு:

1. 1மதிப்புமிகு அருள்தந்தையர்களே இச்சுற்றறிக்கையை 2022 மார்ச் 13-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை எல்லாபங்குகளிலும் திருப்பலிக்கு இடையில் வாசிக்க வேண்டும்.
2. உறவியக் கூட்டங்களில் சுற்றறிக்கையை வாசிப்பதும் உகந்தது.

| FEASTDAYS OF REV. FATHERS - APRIL - 2022 | |
|---|---|
| Bishop Mar George Rajendran sdb | 24 |
| Fr. Geo Choozhikunnel | 24 |
| Fr. Jipson Chully MCBS | 24 |
| Fr. Rony Peedikakal MCBS | 24 |
| Fr. Sinoy Panackachalil MCBS | 24 |
| Fr. Sumesh Velliyamthadathil | 24 |
| Fr. John Paul | 27 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Prot. No. 05/2020**

## DECREE

Having made due consultations and taking into consideration the requirement according to the 'Guidelines of Safe Environment Programme for Church Personnel connected to Institutions where Minors and Vulnerable Adults are given particular Care' by the Syro-Malabar Bishops' Synod and as per decree Prot. No. 0298/2019 dated 6 February 2019 of the Syro-Malabar Major Archbishop, and as provided in the Diocesan Rules for the Constitution of Safe Environment Committee, I, in my capacity of the bishop of the Syro-Malabar Catholic Diocese of Thuckalay, hereby establish the office of the Diocesan Safe Environment Director (DSED) and constitute the Safe Environment Committee (SEC) with effect from 09-03-2020. It is further decreed that as specified in the Rules DSED and the DSEC are the sole authority, unless expressly provided, that has the jurisdiction over the complaints within the diocese of Thuckalay against Church personnel. All complaints of sexual and other abuses of minors and vulnerable adults against Church personnel shall be addressed to DSED. This, however, is not applicable wherever similar structure is mandatory according to the norms of the state or central governments.

Given from the office of the bishop of the Syro-Malabar Catholic Diocese of Thuckalay on 05-03-2020.

BISHOP GEORGE RAJENDRAN sdb * Diocese of Thuckalay *

**† Mar George Rajendran SDB**

† [signature]

**Bishop of the Catholic Diocese of Thuckalay**

**Fr. Thomas Sathianesan**
**Chancellor**



# CATECHISM
# மறைக்கல்வி

> "விடா முயற்சியோடும் ஆர்வமிக்க உள்ளத்தோடும் ஆண்டவருக்கு புணி புரியுங்கள்." (உரோ 12:11)

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்.

***விவிலிய கலைவிழா மறைவட்டப் போட்டிகள் 2021-2022***

விவிலிய கலைவிழா மறைவட்டப் போட்டிகளில் மறைவட்ட வாரியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விபரம்:

1. ஆறுகாணி மறைவட்டம்
    - I. புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், நெட்டா - 68 புள்ளிகள்
    - II. திருக்குடும்ப மறைக்கல்வி நிலையம், ஆறுகாணி - 58 புள்ளிகள்
    - III. புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், பத்துக்காணி - 54 புள்ளிகள்
2. மஞ்சாலுமூடு மறைவட்டம்
    - I. சிறுமலர் மறைக்கல்வி நிலையம், மஞ்சாலுமூடு - 78 புள்ளிகள்
    - II. திருச்சிலுவை மறைக்கல்வி நிலையம், மாலைக்கோடு - 68 புள்ளிகள்
    - III. புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், முழுக்கோடு - 67 புள்ளிகள்
3. நித்திரவிளை மறைவட்டம்
    - I. புனித சவேரியார் மறைக்கல்வி நிலையம், வாறுதட்டு - 71 புள்ளிகள்
    - II. ஜெயமாதா மறைக்கல்வி நிலையம், நித்திரவிளை - 51 புள்ளிகள்
    - III. அமலா மரியா மறைக்கல்வி நிலையம், சீனிவிளை- 50 புள்ளிகள்
4. தக்கலை-பிலாங்காலை மறைவட்டம்
    - I. புனித மேரி மறைக்கல்வி நிலையம், தக்கலை - 60 புள்ளிகள்
    - II. புனித மிக்கேல் மறைக்கல்வி நிலையம், காட்டாத்துறை - 56 புள்ளிகள்
    - III. புனித அல்போன்சா மறைக்கல்வி நிலையம், நாகர்கோவில் - 46 புள்ளிகள்

5. சூசைபுரம் மறைவட்டம்

I. கிறிஸ்து அரசர் மறைக்கல்வி நிலையம், பாலப்பள்ளம் - 70 புள்ளிகள்

II. புனித ஜோசப் மறைக்கல்வி நிலையம், சூசைபுரம் - 48 புள்ளிகள்

II. தேவமாதா மறைக்கல்வி நிலையம், கிள்ளியூர் - 48 புள்ளிகள்

III. புனித வியாகப்பர் மறைக்கல்வி நிலையம், மாங்கரை - 40 புள்ளிகள்

6. களியல் மறைவட்டம்

I. திரு இருதய மறைக்கல்வி நிலையம், பள்ளிக்கோணம் - 79 புள்ளிகள்

II. புனித மேரி மறைக்கல்வி நிலையம், களியல் - 54 புள்ளிகள்

III. புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், மாறப்பாடி - 44 புள்ளிகள்

7. படந்தாலுமூடு மறைவட்டம்

I. திரு இருதய மறைக்கல்வி நிலையம், படந்தாலுமூடு - 74 புள்ளிகள்

II. புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், பளுகல் - 56 புள்ளிகள்

III. புனித மார்ட்டின் டி போரஸ் மறைக்கல்வி நிலையம், கழுவந்திட்டை - 45 புள்ளிகள்

III. புனித மத்தேயு மறைக்கல்வி நிலையம், அண்ணிக்கரை, 45 புள்ளிகள்

தென்காசி மறைவட்டம்

2021-2022 ஆம் ஆண்டுக்கான தென்காசி மறைவட்டத்திற்காகன விவிலியக் கலைவிழா போட்டிகள் 2022, பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை புதூர் புலரி மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கூடத்தில் வைத்து பிற்பகல் 2.30 மணிக்கு தென்காசி மறைவட்ட இயக்கநர் தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்களின் தலைமையில், முன்னாள் மறைவட்ட இயக்குநர் செபி மணிமலக்கண்டத்தில் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வானது இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. நற்செய்தி தலைமையத்திலிருந்து இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில், துணை இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர், முன்னாள் இயக்குநர் அருட்தந்தை சனில் பந்திச்சிறைக்கல், அலுவலக செயலர் அருட்சகோதரி ட்ரீசா FCC, அலுவலக உதவியாளர் சுஜா, தலைமை ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் ஆகியோர் போட்டிகளை மேற்பார்வையிடவும், மாணவர்களை உற்சாகப்படுத்தவும் சென்றிருந்தனர். இவர்கள் அனைவரும் இணைந்து குத்துவிளக்கேற்றி நிகழ்வை தொடங்கி வைத்தனர். அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் அனைவரையும் வாழ்த்தியதோடு, போட்டிகளுக்கான விதிமுறைகளையும் முன்வைத்தார். போட்டிகள் இரு அரங்குகளிலாக பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி 6.00 மணிக்கு முடிவு பெற்றன.

பரிசுகள் வழங்கும் நிகழ்வில், மறைமாவட்ட இயக்குநர்கள், முன்னாள் இயக்குநர்,

மறைவட்ட இயக்குநர் ஆகியோர் பங்கேற்று பரிசுகளையும் சான்றிதழ்களையும், சுழற்கோப்பைகளையும் வழங்கினர். இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில், அனைத்தையும் ஒருங்கிணைத்த அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்களையும் அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த அனைவரையும், போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற அனைவரையும் பாராட்டினார்.

இப்போட்டிகளில், புளியரை, வாஞ்சிநகர், மேக்கரை, புதூர், அமலபுரம், ஆம்பூர் ஆகிய மறைக்கல்வி நிலையங்களிலிருந்து மொத்தம் 40 மாணவர்கள் பங்குப் பெற்றனர். பாப்பரசர் கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

போட்டிகளில் பங்கேற்க நற்செய்தி நிலையங்களின் புள்ளி விபரங்கள்

I. சிறுமலர் மறைக்கல்வி நிலையம், புளியரை - 66 புள்ளிகள்

II. புனித மேரி மறைக்கல்வி நிலையம், வாஞ்சிநகர் - 48 புள்ளிகள்

III. புனித ஜார்ஜியார் மறைக்கல்வி நிலையம், மேக்கரை- 39 புள்ளிகள்

IV. மிஷன் மறைக்கல்வி நிலையம், ஆம்பூர் - 32 புள்ளிகள்

V. புனித தோமையார் மறைக்ல்வி நிலையம், புதூர் - 11 புள்ளிகள்

VI. புனித அமலா மரியா மறைக்கல்வி நிலையம், அமலபுரம் - 6 புள்ளிகள்



***விவிலிய வினாடிவினா மறைமாவட்டப் போட்டிகள் 2021-2022***

2021-2022 ஆம் மறைகல்வி ஆண்டுக்கான விவிலிய வினாடி வினா போட்டிகள் மறைமாவட்ட அளவில் பிப்ரவரி 20 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை, படந்தாலுமூட திரு இருதய ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. ஐந்தாம் வகுப்பு முதல் பனிரண்டாம் வகுப்பு வரையிலான 450 மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கேற்றனர்.

பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்

DIOCESAN LEVEL BIBLE QUIZ FOR STUDENTS-2021-2022 RESULT

STD V: BOYS :

I. Jeshwin S (23/25) Soosaipuram
II. John Fradrick (20/25) Killiyoor
III. Anto S Raj (19/25) Mezhacode

STD V: GIRLS

I. Mary Jensiha .C, (19/25) Palappallam
II. Anciika M, (1825), Soosaipuram
III. Shanika A, (17/25), Paraicode

STD VI: BOYS :

I. Venze Rojar MB, (22/25), Soosaipuram
II. Jan David, (21/25), Manjalumoodu
III. Gibson George, (20/25), Nagercoil
III. Remmingdon Shonic SA, (20/25), Thackalivilai

STD VI: GIRLS :

I. Asina Rexcy R, (21/25), Soosaipuram
II. Reshma S Poovattil, (20/25) Thuckalay
III. Aashlin V, (19/25), Mukkuttukal

STD VII: BOYS :

I. Jijo, RM, (19/25), Vayalinkarai
II. Jeno, J.A., (17/25), Pallikonam
III. Abishek S, (15/25), Kaliyal

STD VII: GIRLS :

I. Pradeepa V, (18/25), Cheenivilai
I. Varsha V, (18/25), Nagercoil
II. Dona Chris CG, (16/25), Nithiravilai
II. Benitta John P.A, (16/25), Soosaipuram
III. Abhina J. Sajan, (15/25), Mezhacode
III. Joylin Benila, (15/25), Mangarai
III. Jerisha J, (15/25), Kattathurai

STD VIII: BOYS :

I. Abhinesh AK, (19/25), Thuckalay
II. Alin Jino RV. (17/25), Nithiravilai
II. Vince Feo, VL, (17/25), Vayalinkarai
III. Joe Miraclin M, (16/25), Neethipuram
III. Ashwin JV, (16/25), Varuthattu

STD VIII: GIRLS :

I. Alfin Sinica J, (23/25), Palapallam
II. Jebisha J, (19/25), Vayalinkarai
III. Alphy AS. (17/25), Thuckalay
III. Ashika R. (17/25), Annikkarai
III. Prathisha R. (17/25), Fathimapuram
III. Shalima S. (17/25), Malaicode
III. Ashlin Femi C, (17/25), Muzhucode
III. Bincy, B, (17/25), Arukany

STD IX: BOYS :

I. Stebin SC, (19/25), Mukkuttukal
II. Ashikan M, (15/25), Kattathuraii
III. Kishan, V, (14/25), Pilankarai

STD IX: GIRLS :

I. Ajaysha Daffini D, (22/25), Fathimapuram
II. Babisha SH, (19/25), Nithiravilai
II. Ashika M, (19/25), Mangarai
III. Asmitha, J, (17/25), Neethipuram
III. Remitha, RA, (17/25), Killiyoor

STD X: BOYS :

I. Bershey R, (22/25), Mangarai
II. Akhilesh RV, (20/25), Varuthattu
III. Kishore, A, (18/25), Pilankarai

STD X: GIRLS :

I. Jeflin GV, (25/25), Palapallam
II. Berhika IK, (22/25), Nithiravilai
III. Abina VG, (21/25), Vayalinkarai
III. Sinchu SR, (21/25), Marappady
III. Jincy JS, (21/25), Netta

STD XI: BOYS :

I. Pavith Raj PL, (17/25), Padanthalumoodu
II. Jaison A, (12/25), Kattathurai
II. Sajish, S, (12/25), Pathukany
III. Abin MR, (11/25), Mukkuttukal
III. Jobin DA, (11/25), Manjalumoodu

STD XI: GIRLS :

I. Abi CM, (24/25), Vayalinkarai
II. Abina RS, (20/25), Padanthalumoodu
III. Ashlin Jenifer R, (19/25), Muzhucode
III. Abina VR, (19/25), Varuthattu

STD XII: BOYS :

I. Johnus M Kumar, (12/25), Vayalinkarai
II. Abinesh A, (11/25), Paraicode
III. Abin Joyal T, (10/25), Soosaipuram
III. Allen Scariah Francis, (10/25), Nagercoil

STD XII: GIRLS :

I. Bercy JP, R, (16/20), Paraicode
I. Sanchu SR, (16/20), Marappady
II. Aswini, R, (15/20), Mangarai
II. Jomol JC, (15/20), Vayalinkarai
II. Nivetha GV, (15/20), Mukkuttukal
III. Ashlin Neha S, (14/20), Munchirai
III. Jerlin Jenika J, (14/20), Palapallam

இப்படிக்கு
அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்.

சிறுமலர் MISSION LEAGUE

# மிஷன் லீக்

மறைமாவட்ட மற்றும் மறைவட்ட இயக்குநர் தந்தையரின் கூட்டம் Google Meet வாயிலாக 2022, ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்டது. மிஷன் லீக் இயக்கத்தின் வளர்ச்சி மற்றும் மாணவர்களின் பங்கேற்பு பற்றியும் 75 ஆம் ஆண்டு பவளவிழா கொண்டாட்டம் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

தவக்காலம் தொடங்கிய அன்றிலிருந்து அன்றைய திருப்பலிக்குரிய நற்செய்திப் பகுதியிலிருந்து சிறு பகுதியை தயார் செய்ய மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அது தற்போது நடந்து வருகிறது

இப்படிக்கு<br>
அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்<br>
இயக்குநர்.

---

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| விருதுநகர் ஆலய அர்ச்சிப்பு | - ஏப்ரல் 3 |
| அருட்தந்தையர் கூட்டம் | - ஏப்ரல் 4 |
| ஓசானா ஞாயிறு | - ஏப்ரல் 10 |
| குருத்துவ உடை மற்றும் ஆயத்த பட்டம் | - ஏப்ரல் 11 |
| திருத்தொண்டர் அருட்பொழிவு | - ஏப்ரல் 12 |
| குருக்கள் மற்றும் துறவியர் தியானம் | - ஏப்ரல் 13 |
| பாஸ்கா வியாழன் | - ஏப்ரல் 14 |
| புனித வெள்ளி | - ஏப்ரல் 15 |
| குருத்துவ அருட்பொழிவு Dn. ஜோஸ்மோன் | - ஏப்ரல் 20 |
| குருத்துவ அருட்பொழிவு Dn. மகேஷ்- | - ஏப்ரல் 23 |
| அருட்தந்தையர் கூட்டம் | - ஏப்ரல் 25 |

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"குழந்தாய், இளமை முதல் நற்பயிற்சியைத் தேர்ந்து கொள்; முதுமையிலும் ஞானம் பெறுவாய்." சீராக் 6:18***

***பொறுப்பாளர்களின் கூட்டம்***

20.03.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணியளவில் கல்லுவிளை KKSSS அலுவலக அரங்கில் வைத்து, பொறுப்பாளர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் போது, இயக்குநர் தந்தை ஜோசப் மங்கலாமடம் அவர்கள், கலைப்போட்டிகளுக்காக பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கவும் கேட்டுக் கொண்டார்.

***பெயர் கொண்ட விழா***

பொறுப்பாளர்கள் கூட்டத்தின் போது இயக்குநர் தந்தை அவர்களின் பெயர் கொண்ட விழா கொண்டாடப்பட்டது. மஞ்சாலுமூடு மறைவட்ட



பொறுப்புடன் செயல்படும் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். மேலும், குழந்தைகள் கோயிலில் கைகூப்பி நிற்க பயிற்றுவித்தல், சிறுசிறு மனவல்லிய செபங்களைச் சொல்ல பயிற்சி அளித்தல், இறைவார்த்தை மனப்பாடம் செய்ய வைத்தல் போன்றவற்றை மேற்கொள்ள பொறுப்பாளர்களைக் கேட்டுக் கொண்டார். அத்தோடு ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி மரீனா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தக்கலை புனித மரியன்னை ஆலய குழந்தைகள் கலைநிகழ்ச்சிகள் நடத்தினர். அருட்தந்தை அவர்கள் அனைவருக்கும் கேக் வழங்கினார்.

***இப்படிக்கு,***

***Fr. ஜோமோன் மங்கலாமடம்***

***இயக்குநர்***

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

## தலைமைத்துவ பயிற்சி வகுப்பு

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் மற்றும் தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கம் இணைந்து நடத்திய SMYM ஊக்குவிப்பாளர்கள், மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி அலுவலகத்தில் 6.3.2022 அன்று நடைப்பெற்றது. விரிவுரையாளராக திருச்சி வழிகாட்டி இயக்குநர் அருட்தந்தை அருள் ஆன்டணி SDB, கலந்து கொண்டார். இப்பயிற்சியில் 55 இளையோர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியானது, பிற்பகல் 2 மணிக்கு செபத்துடன் ஆரம்பமானது. நிகழ்வின் தொடக்கத்தில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் பயிற்சியின் நோக்கம் பற்றிப் பேசினார். தொடர்ந்து அருட்தந்தை அருள் ஆன்டணி SDB அவர்கள் தலைமைத்துவத்தின் வெவ்வேறு பரிமாணங்கள் பற்றி, சிறு சிறு விளையாட்டுகள் விளக்கினார். இந்நிகழ்வு மாலை 4.30 மணிக்கு நிறைவடைந்தது. மறைமாவட்ட நடுவண் செயற்குழுவினர் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.



## நடுவண் செயற்குழு கூட்டம்

நடுவண் செயற்குழு கூட்டமானது 20.03.2022 அன்று தெற்றியோடு புனித பவுல் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தின் போது, மறைமாவட்ட மற்றும் மறைவட்ட அளவில் நடக்கும் YOUTHFEST போட்டிகள் நடத்த வேண்டிய விதம் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பொறுப்பாளர்களுக்கு, பொறுப்புகள் பிரித்து ஒப்படைக்கப்பட்டன. வெவ்வேறு மறைவட்டங்களுக்கு செல்ல வேண்டிய உறுப்பினர்கள் பற்றிய பட்டியலும் தயாரிக்கப்பட்டது. பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான கூட்டமானது 4.30 மணிக்கு முடிவடைந்தது.

## களியல், படந்தாலுமூடு மறைவட்ட போட்டிகள்

களியல் மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கான YOUTHFEST போட்டிகள் 27.03.2022 அன்று முறையே களியல் மற்றும் படந்தாலுமூடு ஆலய வளாகங்களில்





வைத்து நடத்தப்பட்டது. களியலில் நடந்த போட்டிக்கு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் தலைமையேற்றார்கள். படந்தாமூட்டில் நடந்த போட்டிகளுக்கு மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையேற்றார்கள். களியலில் இரண்டு அலகுகளும், படந்தாலுமூட்டில் நான்கு அலகுகளும் போட்டிகளில் பங்கேற்றன.

***இவண்***
***சஜித்***
***செயலர்***

# தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம்
Thuckalay Youth Educational Services in Collaboration with Trichy Vazhikatti

### *வாழ்க்கைத்திறன் பயிற்சி:*

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் மற்றும் திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டி உதவியுடன் 5.3.2022 அன்று கருங்கல், நாஞ்சில் கத்தோலிக்க CBSE பள்ளியில் வாழ்க்கை வழிகாட்டி மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சி நடைப்பெற்றது. விரிவுரையாளர்களாக தக்கலை இளையோர் கல்விச் சேவை பணியகத்தின் (TYES) இயக்குநர், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், மனிதவள பயிற்சியாளர் முனைவர்



மகேந்திரன், திருச்சி வழிகாட்டியின் ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜா, TYES ஒருங்கிணைப்பாளர் திருமதி ஷீஜிமோள் ஆகியோர் கலந்து கொண்டனர். எம் பணியகத்தின் இயக்குனர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார். கருத்தமர்வில் 103 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கருங்கல், புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகளிர் தினத்தை முன்னிட்டு 07.03.2022 அன்று 'இளையோர்களும் எதிர்காலமும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. சிறப்பு விருந்தனராக எம் இயக்கத்தின் இயக்குனர் பேரருட் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் கலந்து கொண்டு மகளிர் முன்னேற்றம் குறித்து சிறப்புரையாற்றினார். விரிவுரையாளராக வெளிச்சம் அமைப்பின் தலைவர் திருமதி. ஷெரின் அவர்கள் கலந்து கொண்டு இளையோர்கள் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் இன்றைய சூழலில் பெண்களின் பாதுகாப்பின் விழிப்புணர்வு குறித்தும் சிறப்பாக உரையாற்றினார்.

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் மற்றும் தக்கலை கத்தோலிக்க

இளையோர் இயக்கம் இணைந்து நடத்திய 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டி மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சி



மறைமாவட்ட அளவில் 8.3.2022 அன்று படந்தாலுமூடு மற்றும் மஞ்சாலுமூடு ஆலய அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. விரிவுரையாளர்களாக அருட்தந்தை ஜாண் பால் SDB, திரு. ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கருத்தமர்வில் 125 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பிலாங்காலை, புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியானது 19.03.2022 அன்று TYES ஒருங்கிணைப்பாளர் ஷீஜிமோள் அவர்களால் நடத்தப்பட்டது. சிறந்த முறையில் படிப்பதற்கு சில பழக்க வழக்கங்கள் குறித்தும்,



10 ஆம் வகுப்பு முடித்தப் பிறகு என்ன படிக்க வேண்டும்? என்பது குறித்து விளக்கினார். இப்பயிற்சியில் 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஷீஜி மோள்,
அலுவலக செயலர்

அலைபேசி: 8667428054

# இல்வாழ்வு இயக்கம்



"எமது குடும்பங்களுக்கு இறைவன் தேவை, ஒவ்வொருவருக்கும் தேவை, அவரது உதவி, அவரது ஆசீர், அவரது கருணை,அவரது மன்னிப்பு எமக்கு தேவை. இதற்கு எமக்கு தாழ்ச்சி அவசியம். குடும்பமாக செபிக்க நாம் தாழ்மையாக இருக்க வேண்டும்."

- திருத்தந்தை பிரான்சிஸ்

***இல்வாழ்வு இயக்கம்***

குடும்ப நல்வாழ்வு மது அடிமைகள் மறுவாழ்வு மையம்: தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் தொடங்கட்பட்ட திருமண வாழ்வானது அன்னை மரியாவின் தூய எண்ணங்கள் மற்றும் இறைவனிடம் கொண்டிருந்த விசுவாசத்தை போல குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்ற நோக்குடன் இவ் இயக்கம் குடும்பங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. மார்ச் 21 ம் தேதி டாக்டர் அவர்கள் வருகை புரிந்தார். அன்றைய தினம் சுமார் 25 நோயாளிகள் பயன் அடைந்தனர். Counselling Service: இவ்வேளையில் மக்களுக்கு அறுதல்களும், அறிவுரையும் தேவை. இந்நோக்குடன் எமது அலுவலகத்தில் அருள் கொடை பெற்ற அருள்தந்தை மற்றும் கன்னியர்களாலும் ஆலோசனையும், அறிவுரையும் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநோய் மற்றும் மனநோய்யாளிகளுக்கு மருத்துவரின் ஆலோசனைகளும், சிகிட்சையும், மருந்துகளும் வழங்கப்படுகிறது.


***மகளிர் தினக் கொண்டாட்டம்***

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு இல்வாழ்வு இயக்கம் மற்றும் நல்வாழ்வு இயக்கம் சார்பாக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி புனித அல்போன்சா கலை கல்லூரி சூசைபுரத்தில் வைத்து மார்ச் 8 அன்று நடைபெற்றது. மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் விழவை தொடங்கி வைத்தார். அப்போது பேசுகையில் பெண்கள் ஆற்றல் , அன்பு மற்றும் நம்பிக்கை மிகுந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் சூசையப்பர் கன்னி மரியாளை பாதுகாத்து வழிநடத்தியது போன்று ஆண்கள் பெண்களை பாதுகாக்க வேண்டும் என்று கூறினார். மேலும் டாக்டர் திரு சுதாகர் அவர்கள் 1 மணி நேரம் தாய்மார்களுக்கு புற்றுநோய் குறித்து வகுப்புகள் நடத்தினார். மேலும்


புற்றுநோய் வராமல் தடுக்க வேண்டிய உணவு முறை பற்றியும் விளக்கினார். மேலும் இந்நிகழ்ச்சிகளையெட்டி தாய்மார்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது இந்நிகழ்ச்சிகளில் பல்வேறு பங்கை சார்ந்த 100 தாய்மார்கள் பங்கேற்றனர்.

***மாதர் ஜோதிஸ் இயக்கம்***




"ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர் . அறிவற்றவரோ தம் கைகளைக் கொண்டே அதை அழித்து விடுகின்றனர்" (நீமொ 14:1) என்ற இறைவசனத்திற்கு இணங்க ஞானமுள்ள பெண்களை உருவாக்க மாதர் ஜோதிஸ் இயக்கம் பக்கபலமாக இருந்த செயல்பட்டு









வருகிறது. மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக சூசைபுரம் மறைவட்ட பெறுப்பாளருடைய கூட்டம் மார்ச் 8 ம் தேதி மதியம் 12 மணியளவில் புனித அல்போன்சா கலை கல்லூரி சூசையப்புரத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் சூசைபுரம் மறைவட்ட பெறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

இயக்க ஆண்டு விழாவையொட்டி தாய்மார்களுக்கு நீங்கள் ஜெபிக்கும் போது என்னும் புத்தகத்திலிருந்து தேர்வு மார்ச் 27 திரு இருதய ஆலய வளாகம் படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்றது. இதில் சுமார் 50 பேர் தேர்வு எழுதினர். இவர்களுக்கு ஆண்டுவிழாவின் போது பரிசுகள் வழங்கப்படயுள்ளது.

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்
இயக்குநர், இல்வாழ்வு இயக்கம்




# வின்சென்ட்- தே-பவுல் சபை

## *தக்கலை மத்திய சபை*

தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவின் (1997 - 2022) துவக்க நிகழ்வானது 13/3/2022 அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், மத்திய சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தநந்தை தோமஸ் பவத்துப்பறம்பில், படந்தாலுமூடு வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை டென்சி முண்டு நடக்கல் ஆகியோரின் கூட்டு திருப்பலியுடன் சிறப்புற துவங்கி பின்னர் சிறப்பு பொது நிகழ்வுகள் நடைப்பெற்றது. எல்லா கிளை சபைகளுக்கும் ஒரு நாள் வைத்து செபம் செய்ய வஜன ஜோதி என்னும் பெட்டகம் ஆயர் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு முதன் முதலில் துவங்கிய புனித ஜோசப், சூசைபுரம் கிளை சபைக்கு வழங்கப்பட்டது. பின்னர் அந்த பெட்டகம் எல்லா கிளைச் சபைக்கும் தொடர்ந்து சென்று சேரும் விதமாக திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் வெள்ளி விழா சார்பாக புதிதாக 14 திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இறுதி ஆசீர் உடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## *வாறுதட்டு கிளைச்சபை*

நித்திரவிளை வட்டார சபைக்குட்பட்ட வாறுதட்டு புனித பிரான்சிஸ் சேவியர் கிளைசபை மற்றும் புனித குழந்தை இயேசுவின் தெரசாள் கிளைசபையின் சார்பாக 16 குடும்பங்களுக்கு சுயதொழில் கடனுதவி திட்டம் 27-02-2022 (ஞாயிற்றுகிழமை) அன்று அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் மற்றும் மத்திய சபையின் தலைவர் சகோ. றாபி அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டது.



### சூசைபுர வட்டார வெள்ளிவிழா வஜன ஜோதி

தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவை ஒட்டி சூசைபுரம் வட்டாரத்தில் வஜன ஜோதி நடத்தப்பட்டு வருகிறது. இது, வட்டாரத்திற்குட்பட்ட அனைத்துப் பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

### கிறிஸ்துராஜபுரம் கிளைச்சபை

நித்திரவிளை வட்டார சபைக்குட்பட்ட கிறிஸ்துராஜபுரம் புனித வின்சென்ட்



தே பவுல் கிளை சபையில் சகோ.மணிகண்டன் அவர்கள் 27.3. 2022 அன்று தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். மத்திய சபை பொறுப்பாளர்கள் வாயிலாக உறுதி மொழி ஏற்று சொல்லி ஆன்மீக ஆலோசகர் தந்தையிடம் ஆசி பெற்றுக்கொண்டார்.

### ஆறுகாணி வட்டாரச்சபை



மத்திய சபையின் HES (Higher Education Scheme) கல்வி உதவித்திட்டம் வாயிலாக ஆறுகாணி வட்டார சபைக்குட்பட்ட மாணவிக்கு ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் அவர்களால் கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது.

தகவல் சேகரிப்பு
D. P. ஷாஜி
தகவல் தொடர்பு அலுவலர்

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

***பெண்கள் தினம்***

பெண்கள் சிறப்பினையும், உரிமைகளையும் உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 தேதி பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் சுயஉதவி குழுக்களின் பெண்கள் தினம் மற்றும் குழுக்களின் ஆண்டு விழா மார்ச் 8 தேதி கொண்டாடப்பட்டது. முதல் அமர்வில் கருத்துரையாளராக புற்று நோய் சிகிச்சை நிபுணர் Dr.செந்தில், நிறுவனர், ஸ்ரீ ராம் ட்ரஸ்ட், கன்னியாகுமரி




புற்று நோய் பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அப்போது உங்கள் பயம் புற்றுநோயை பற்றியதாக இருக்க வேண்டாம், புற்று நோய் பற்றி பயம், தாமதிப்பதை பற்றியே இருக்க வேண்டும் எனவும் புற்றுநோய் பரிசோதனை செய்து பயமில்லாமல் வாழ்ந்திடுங்க எனவும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பெண்கள் தினம் KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் முன்னுரை வழங்கி வரவேற்று பேசினார்கள். நிகழ்சியில் தலைமையுரை வழங்கி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் பேசும் போது உடலுறுதி கொண்ட

ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். தாயாக மனைவியாக, தங்கையாக, மகளாக என்று நம் உறவின் அனைத்து பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று கூறப்படுவது இதனால் தான். தோல்விகளை கண்டு துவண்டு விடாது அதனை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றிக்கண்ட பல பெண்கள் நம் மத்தியில் வாழ்கின்றனர். அவ்வாறான பெண்களுக்கு மட்டுமின்றி அனைத்துலக பெண்களுக்கும் அவ்வறான பெண்களுக்கு மட்டுமன்றி அனைத்துலக பெண்களுக்கும் இன்றைய நாளில் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிச்சியடைகின்றேன் என கூறினார்கள். சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களை பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இடையிடையே கலைநிகழ்வுகள் நடைபெற்றது. இதில் அலுவலகப் பணியாளர்கள் சுய உதவிக்குழு மகளீர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### *கல்வி உதவித்தொகை*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா மார்ச் 10 தேதி நடந்தது. ஏழை மற்றும் ஆதரவற்ற மாணவர்களின் உயர் கல்விக்கு, ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு 40 மாணவர்கள் கல்லூரியில் சேர நிதி உதவி வழங்கப்பட்டது. KKSSS அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். இதில் தக்கலை மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை. தோமஸ் பவ்வத்து பறம்பில், KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்து மூட்டில் மற்றும் சூசைபுரம், புனித அல்பேன்சா கலை கல்லூரி முதல்வர் முனைவர் இசையாஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### *“வர்ணம் 2021”*

குழந்தைகளின் ஓவியத்திறமையை வெளிக்கொணர குழந்தைகள் தினத்தையொட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் மாவட்ட அளவிலான ஓவிய போட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி நடைபெற்றது . “வர்ணம் 2021” டிசம்பர் மாதம்13 தேதி- நடைபெற்றது. இதில் 7 பள்ளிகளை சார்ந்த 91 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 4-6 வகுப்புவரை மாணவர்களுக்கு “குழந்தைகள் தினம்” எனவும் 7-10 வகுப்புவரை மாணவர்களுக்கு “குமரியின் அழகு" என இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற நிகழ்வில் சிறப்பாக ஓவியம் வரைந்த மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு மார்ச் 10 தேதி KKSSS அரங்கத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ்

பவ்வத்துப்பறம்பில் அவர்கள் சிறப்பாக ஓவியம் வரைந்த மாணவர்களை பாராட்டி பரிசு தொகை மற்றும் கோடயம் வழங்கி தலைவர் உரை வழங்கினார்கள். இதில் KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் மாணவ மாணவர்கள் கலந்த கொண்டனர். இந்நிகழ்வை Educare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மெரின் றோஸ் ஒருங்கிணைத்தார்கள். பரிசு பெற்றவர் விவரம்

**Children's Day**

| No. | Prize | Name | School Name |
|---|---|---|---|
| 1 | 1st | Kevin | S.H. Middle School, Kamaraj Nagar |
| 2 | IInd | B.S. Subiksha | G.H.S. Moolachal |
| 3 | II1rd | K.R. Akshitha | John Paul II, Kulasekharam |

**Beauty of Kanniyakumari**

| No. | Prize | Name | School Name |
|---|---|---|---|
| 1 | 1st | S. Shine Godson | S.H.C.M.H.S.S. Kazhuvanthittai |
| 2 | IInd | Jeffln Shalow | The Packiyanath Public School |
| 3 | II1rd | R.A. Sudhisha | G.H.S. Moolachal |

***பாலியல் வன்முறை விழிப்புணர்வு***

தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு சார்பில் பாலியல் வன்முறை பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு மார்ச் மாதம் 12-15 தேதியில் கன்னியாகுமரி கார்மல்மாதா மெட்ரிக் பள்ளி, முழுக்கோடு மவுண்ட் கார்மல் மெட்ரிக் பள்ளி



மற்றும் காட்டாத்துறை,புனித மைக்கேல் மெட்ரிக் பள்ளிகளில் நடத்தப்பட்டது. இதில் பெண்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் மேலும், மாணவ-மாணவியர் மீது பாலியல் ரீதியான வன்முறைகள் கண்டறியப்பட்டால் அவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை மற்றும் பெண் குழந்தைகளின் பள்ளியில் தெரிவிக்கும் தகவல்கள் எவ்வாறு ரகசியம் காக்கப்படும் என்பதை பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு பயிற்சியை அருட் சகோதரிகள் டயானா மற்றும் டெஸ் மரியா வழிநடத்தினார்கள். இதில் மூன்று பள்ளிகளை சார்நுத 500 க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### *Caritas Meeting*

காரிதாஸ் இந்தியாவின் தென் மண்டல அமைப்பு இயக்குநர்களின் கூட்டமானது கோயம்புத்தூர் சமூக சேவை சங்கத்தில் வைத்து மார்ச் 24&25 தேதிகளில் நடை பெற்றது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் கலந்து கொண்டார் அப்போது கீழ்கண்ட பிரச்சனைகள் குறித்து விவாதித்தனர். சங்கங்களுக்கிடையே புதிய



வளம் (Funding) கண்டறிதல் மற்றும் திட்டங்கள் (Project) செயல்படும் விதம், சமூகத்தில் நிகழும் பிரச்சனைகள் பற்றியும், விவாதிக்கப்பட்டது. எழுவோம் இயக்கம் திட்டத்தினைப் பற்றி தமிழ்நாடு காரிதாஸ் அமைப்பாளர் முனைவர். ஜான் ஆரோக்கிய ராஜ் அவர்கள் கலந்து கொண்டு புற்று நோய் விழிப்புணர்வு நிகழ்வை எவ்வாறு மக்களை முழுமையாக விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இதில் தமிழ் நாட்டை சார்ந்த அனைத்து இயக்குநர் தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

### *தொழில் முனைவோர் ஊக்குவிப்பாளர்*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சர்பில் நடத்தப்படும் "குடும்பம் ஒன்றை காப்போம்' திட்டத்தின் புதிய பயனாளிகளுக்கான விழிப்புணர்வு முகாம் கல்லுவிளை



ஆசீர் அரங்கத்தில் வைத்து மார்ச் 19 தேதி KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

***நிரந்தர வருமானம்***

இதில் சிறப்பு விருந்தினராக குடும்பம் ஒன்றை காப்போம் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. விஜயராஜன் அவர்கள் பேசும் போது பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியிருந்த ஏழைகள் வாழ்வில் ஒளியேற்ற நிரந்தர வருமானம் கிடைக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் பெண்கள் ஒரு தொழிலைக் கற்றால் வீட்டிலிருந்தே அத்தொழிலைச் செய்து வருமானம் ஈட்ட முடியும். அதாவது ஆடு, மாடு, கோழி வளர்த்தல் என்பது மிகவும் எளிமையாக நாமே வீட்டிலிருந்த படியே செய்யலாம் சரியான உணவு மற்றும் இடவசதிகளை முறையாக பயன்படுத்தினால் அதிக இலாபம் ஈட்டலாம். எந்த வீட்டில் சுயதொழில் இருக்கிறதோ அந்த வீட்டில் முன்னேற்றம் இருக்கும் என கூறினார். புதிய பயனாளிகள் 50 பேர் கலந்து கொண்டனர்.

***Educare***

தக்கலை மறைமாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் Educare அலகு செயல்படுகிறது. இந்த அலகின் 5 கட்ட மாணவர்களுக்கான சுய முன்னேற்ற வகுப்பு மார்ச் 4 தேதி நடைபெற்றது. இதில் பயிற்சியளராக Sr. ரீஜா கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆடல், பாடல் மூலம் பயிற்சி அளித்து பேசினார். அப்போது, சுய முன்னேற்றம் என்பது ஒருவர் தன்னைத்தானே முன்னேறிக் கொள்வதை குறிக்கும். பலர் தங்களது நேரத்தை சரியாகத் திட்டமிடத் தெரியாமல், வீணாக்குவதையும் நாம் பார்க்கலாம். சரியான திட்டமிடல் இருந்தால் மட்டும் தான் முன்னேற்றம்



இருக்கும் என கூறினார். இதில் Educare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி. மெரின் றோஸ் உட்பட 38 மாணவர்கள் பங்கேற்றனர்.

### *புற்று நோய் ஒழிப்பு மருந்து*

தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு சார்பில் புற்று நோய் ஒழிப்பு மருந்து பற்றிய கருத்தரங்கு மார்ச் 21 தேதி தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. இதில் தக்கலை மறை மாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையுரையாற்றி தொடங்கி வைத்தார். நிகழ்வு முன்னுரை தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு இயக்குனர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வழங்கினார்கள். கருத்தரங்கை அருட் சகோதரிகள் நிர்மலா மற்றும் பவ்யா ஆகியோர் புற்று நோய் ஒழிப்பு மருந்து பற்றியும் மூலிகை செடி பற்றியும் கருத்துரை வழங்கினார்கள். அப்போது "அரித்மீசியா ஆனுவா அனமெட்" என்னும் மூலிகையை அறிமுகப்படுத்தினார். இம்மூலிகையின் பயன்கள். பயன்படுத்தும் முறை மற்றும் புற்று நோயை எவ்வாறு எதிர்த்து போராடும் முறைகளை எடுத்துரைத்தார். இந்த மருந்தை பயன்படுத்தி புற்று நோய் குணமடைந்த ஒருவர் தனது அனுபவங்களை பகிர்ந்தார். இதில் தக்கலை மறைமாவட்டத்தை சார்ந்த அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் KKSSS களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்

செயலர்

# மறைமாவட்டச் செய்திகள்

## இளங்குருமட இல்லவிழா

கடந்த இரண்டு ஆண்டுகளில், கோவிட் விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததால், அனைத்துப் பெற்றோர்களையும் அழைத்து குருமட இல்லத்தின் விழா கொண்டாட இயலாமற்போனது. கேரளத்தில் வாழும் பெற்றோரும் பங்கேற்கும் விதத்தில் இவ்வாண்டு, இணையம் வழியாக 15.03.2022 அன்று இளங்குருமட இல்லவிழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். குருமாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றன.

## அருட்தந்தையருக்கான அரைநாள் தியானம்

அருட்தந்தையருக்கான அரைநாள் தியானம் 15.03.2022 அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. மார்த்தாண்டம் மறைமாவட்ட அருட்தந்தை ஸ்டீபன் அவர்கள் தியான உரை வழங்கினார்.



## இதர செய்திகள்

- மறைமாவட்ட ஆயர் ஆலோசனை மன்றத்தின் கூட்டமானது 2022 மார்ச் 1 அன்று நடைபெற்றது. மறைமாவட்ட செயல்பாடு மற்றும் பணி பற்றிய கருத்துக்கள் பெறப்பட்டன.
- குமரியில் செயல்படும் நான்கு கத்தோலிக்க ஆயர்களின் கூட்டமானது கோட்டாறு ஆயர் இல்லத்தில் வைத்து 11.03.2022 அன்று நடைபெற்றது. 26.03.2022 அன்று நடைபெற இருந்த மத நல்லிணக்க நாள் கருத்தமர்விற்கான

கருத்துப்பரிமாற்றங்கள் இக்கூட்டத்தில் நடைபெற்றது.

- மறைமாவட்டச் சட்டக்குழு உருவாக்கத்திற்கான முதல் கூட்டம் 13.03.2022 அன்று படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்றது. இதில் மறைமாவட்டத்தைச் சேர்ந்த எட்டு வழக்குரைஞர்கள் பங்கேற்றனர். அருட்தந்தை Adv. பிரின்டோ குரியாஸ் அவர்களிடம் சட்டக்குழுவிற்கான - Thuckalay Legal Cell - விதிமுறைகளை உருவாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் உடன் இருந்தார்.

- குருத்துவ அருட்பொழிவிற்கான தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் திருத்தொண்டர்கள் மகேஷ் மற்றும் ஜோஸ்மோன் ஆகியோரின் வீடுகள், முறையே 4,12.03.2022 தேதிகளில் ஆயர் மற்றும் அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் ஆகியோரால் சந்திக்கப்பட்டன.

- விருதுநகரில் கட்டப்பட்டு வரும் புனித ஜோசப் ஆலயத்தின் அர்ச்சிப்பு விழா 03.04.2022 அன்று நடைபெறும்.

- ஏப்ரல் 11, 2022 அன்று குருத்துவத் தயாரிப்பிற்கான சிறு பட்டங்கள் தக்கலை சங்கமத்தில் வைத்து நடத்தப்படும்.

- திருத்தொண்டர்களுக்கான அருட்பொழிவு 12.04.2022 அன்று வாறுதட்டு புனித சவேரியார் ஆலயத்தில் வைத்து நடைபெறும்.

- இவ்வாண்டு இரு திருத்தொண்டர்கள் பணிக்குருத்துவ அருட்பொழிவு பெற இருக்கிறார்கள். 2022 ஏப்ரல் 20 அன்று திருத்தொண்டர் ஜோஸ்மோன் அவர்கள் அன்னிக்கரை புனித மத்தேயு ஆலயத்தில் வைத்தும், திருத்தொண்டர் மகேஷ் அவர்கள் 23.04.2022 அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்தும் அருட்பொழிவு செய்யப்படுவர்.

- குருத்துவம் நிறுவப்பட்டதை நினைவு கூரும் விதத்தில், 13.04.2022 அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து, அருட்தந்தையர் மற்றும் அருட்சகோதரிகளுக்காக அரைநாள் தியானமும் திருப்பலியும் நடைபெறும்.

# மறைவட்டச் செய்திகள்

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

19.03.2022 அன்று புனித யோசேப்பின் திருவிழா கொண்டாடப்பட்டது. காலை 6.30 மணிக்குத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்களின் சார்பில் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. பங்குத்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழா கொண்டாடப்பட்டது.



மார்த்தாண்டம் YMCA சார்பில் பெண்கள் தினம் 4.3.2022 அன்று முஞ்சிறை அன்பகத்தில் வைத்துக் கொண்டாடப்பட்டது. பல்வேறு கலைநிகழ்ச்சிகள் வாயிலாக அன்பகத்தில் வாழும் முதியோர்கள் மகிழ்விக்கப்பட்டனர். மதிய உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது.

16.03.2022 அன்று அன்னம்மாள் நர்சிங் மாணவிகள் 55 பேர் அன்பகத்திற்கு வருகை புரிந்து, முதியோர்களை சந்தித்து, கலைநிகழ்ச்சிகளால் முதியோரை மகிழ்வித்தனர்.

19.03.2022 அன்று தும்பாலி பங்குமக்கள் பங்குதந்தையுடன் அன்பகத்திற்கு வருகை புரிந்து, திருப்பலி நிறைவேற்றி அனைவருக்கும் மதிய உணவு வழங்கினர்.

26.03.2022 அன்று பூத்துறை பங்கைச் சார்ந்த மாணவர்கள் அன்பகம் வந்து, அனுபவம் பெற்றுச் சென்றனர்.

### புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை

*03.03.2022* அன்று மதியம் மூன்று மணியளவில், திருத்தொண்டர் மகேஷ் அவர்கள் திருப்பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தினார்.



*04.03.2022* அன்று மாணவர்களுக்கான இறையழைத்தல் வகுப்பு நடத்தப்பட்டது. இவ்வகுப்பையும் திருத்தொண்டர் மகேஷ் அவர்களே நடத்தினார்.

### புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

*24.03.2022* முதல் *27.03.2022* வரை நான்கு நாட்கள் தவக்கால தியானம் நடைபெற்றது. வியாழன் மற்றும் ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் தியானத்தோடு இணைந்து நற்கருணை ஆராதனையும் நடத்தப்பட்டது. தியானத்தன் மூன்றாம் நாளன்று ஒப்புரவு வழிபாடு நடந்தது. இறுதி நாளின் போது அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

## படந்தாலுமூடு

### திருஇருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

*26.03.2022* அன்று மாலை 6 மணியளவில் திருத்தொண்டர் மகேஷ் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு பற்றி ஆலோசிப்பதற்காக

பங்குப் பேரவை கூட்டம் பேரருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் முன்னிலையில் நடைபெற்றது. இதில் அதங்கோடு பங்குப்பேரவை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

புனித சூசையப்பரின் திருநாளை முன்னிட்டு படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்தின், புனித சூசையப்பர் உறவிய மக்களால் 20.03.2022 அன்று திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. அன்று மாலை நடைபெற்ற உறவியக் கூட்டத்தில் பங்குத்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்களின் பெயர் கொண்ட விழாவையும் சிறப்பித்தனர். இதில் அருட்சகோதரிகளும் உறவிய மக்களும் பங்கேற்றனர்.

படந்தாலுமூடு ஆலய எல்லைக்குட்பட்ட MMM அருட்சகோதரிகள், தாங்கள் அமைத்த சிற்றாலயம் மற்றும், மடோன்னா கார்மென்ட்ஸ் நிலையம் ஆகியவற்றை 8.03.2022 அன்று திறந்து வைத்தனர். சிற்றாலய அர்ச்சிப்பை தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நிறைவேற்றினார்.



## புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

தெற்றியோடு புனித பவுல் ஆலயம் சார்பாக, தவக்கால முயற்சியாக பதினான்கு கோயில்களுக்குச் செல்லும் திருப்பயணம் 12.03.2022 அன்று மேற்கொள்ளப்பட்டது. கள்ளிகுளம், திருக்கல்யாண மாதா திருத்தலம், மணப்பாடு, மணல்மாதா, உவரி, கன்னியாகுமரி போன்ற இடங்களுக்குச் சென்று சிலுவைப்பாதை செபிக்கப்பட்டது.

உறவிய வாரியான சிலுவைப் பாதையானது 6, 13, 20, 27 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. பங்கு மக்கள் அனைவரும் பங்கேற்கும் விதத்தில் ஒரு ஞாயிறு ஓர் உறவியம் என்னும் முறையில் நடத்தப்பட்டது.

27.03.2022 அன்று வின்சென்ட் தே பவுல், பெண்கள் மற்றும் ஆண்கள் கிளைச் சபைகளை சந்திக்க, வின்சென்ட் தே பவுல் படந்தாலுமூடு வட்டாரத் தலைவர் திரு. ஜெபமணி அவர்கள் வந்தார்கள். திருப்பலிக்கு பின்னர் நடந்த கூட்டத்தில் சுமார் 20 பேர் பங்கேற்றனர்.

பங்கின் பொன்விழாவை முன்னிட்டு, கோயிலுக்கு வண்ணம் பூசுதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.



தக்கலை சீரோ மலபார் இளையோர் இயக்கம் சார்பாக மறைவட்ட அளவில் 27.03.2022 அன்று படந்தாலுமூட்டில் வைத்து நடத்தப்பட்ட கலைப்போட்டிகளில், தெற்றியோடு பங்கைச் சார்ந்த இளையோர்கள் முதலிடத்தைப் பிடித்தனர்.

20.03.2022 அன்று பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் பெயர் கொண்ட திருவிழா மறைக்கல்வி மாணவர்கள் சார்பில் சிறப்பிக்கப்பட்டது. நிகழ்வின் போது மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

- **புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை**

தவக்காலத்தை முன்னிட்டு 27.03.2022 அன்று ஒருநாள் தியானம் மற்றும் நற்கருணை ஆராதனை ஆகியவை நடைபெற்றன. இதை அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் வழிநடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

- தவக்காலத்தை முன்னிட்டு எல்லா நாட்களிலும் மாலை ஐந்து மணிக்கு சிலுவைப்பாதையும், அதைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்று வருகிறது.

## மஞ்சாலுமூடு

- **புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு**



20.03.2022 அன்று புனித சூசையப்பர் விழாவும், மறைந்த முன்னாள் பங்குத் தந்தை சாக்கோ பேசில் CMI அவர்களின் நினைவு விழாவும் கொண்டாடப்பட்டது.

விழாவின் போது காலை 9 மணிக்கு சிலுவைப்பாதை, ஆடம்பர திருப்பலி, சூசையப்பர் நவநாள், அருட்தந்தை சாக்கோ பேசில் அவர்களுக்கான செபங்கள் ஆகியவை நடைபெற்றன. பின்னர் பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது முன்னாள் பங்குப்பேரவை உறுப்பினர்களின் சேவைகள் பாராட்டப்பட்டு நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன.

### புனித சிறுமலர் மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு

23.03.2022 புதன்கிழமை தொடங்கி 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய தவக்கால தியானம் நடைபெற்றது. தினமும் மாலை 5 மணிக்கு சிலுவைப்பாதையுடன் தொடங்கி, திருப்பலி தொடர்ந்து தியானத்துடன் முடிவடைந்தது. இறுதி நாளன்று காலை 6.45 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து தியானமும் நடைபெற்றது. அன்று அனைவருக்கும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. தவக்கால தியானத்தில், நற்செய்தி உரை, ஒப்புரவு, நற்கருணை ஆராதனை, நோயாளிகள் மேல் சிறப்பு ஆசீர் ஆகியவை நடைபெற்றன. இதை அருட்தந்தையர், ஜேசு OFM, ஜேசுராஜ் OFM, பீட்டர் சலேத்நாதன் OFM மற்றும் IHS குழுவினர் வழிநடத்தினர். பங்குதந்தை அகஸ்டின் தலோடில், துணைப் பங்குதந்ததை ரோபின் ஜோஸ் ஆகியோர் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

தவக்காலத்தை முன்னிட்டு அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணிக்கு இரக்கத்தின் ஜெபமாலையும் திருப்பலியும் சிலுவைப்பாதையும் நடைபெற்று வருகிறது. இவற்றை உறவியங்கள் சிறப்பிக்கின்றன.

*2022* மார்ச் *13* ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மகளிர் தின சிறப்பு நிகழ்வு, பங்குத்தந்தை அஜீஷ் அட்டியில் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திரு. வென்சஸ்லாஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு வகுப்பு நடத்தினார். நிகழ்வுகளை அருட்சகோதரி கிளாராம்மா SDS அவர்கள் ஒருங்கிணைத்தார்.



*19.03.2022* அன்று பங்கின் பாதுகாவலரான புனித சூசையப்பர் திருவிழா கொண்டாடப்பட்டது. மாலை *6* மணிக்கு செபமாலை தொடர்ந்து ஆடம்பரத் திருப்பலியும் சூசையப்பர் தின சிறப்பு நவநாள் செபமும் நடைபெற்றது. இறுதியில் அன்பின் விருந்து பகிரப்பட்டது.

## தக்கலை–பிலாங்காலை

### ▶ புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை, மார்ச் மாதம் *19* ம் தேதி புனித சூசையப்பர் திருநாள் அன்று மாலை *6.30*மணிக்கு ஆலயத்தில் பங்குத்தந்தை பேரருட்தந்தை தோமஸ் தெக்கேத்தலா CMI தலைமையில் ஆடம்பர திருப்பலி மற்றும் காணிக்கை பவனி மற்றும் நேர்ச்சையும் நடைபெற்றது. குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தந்தை அவர்கள் சிறப்பாக ஜெபித்தார்கள்.

### புனித ஜார்ஜியார் ஆலயம் – ஆனையடி

ஆனையடி புனித ஜார்ஜியார் ஆலயத்தில் புனித சூசையப்பர் திருநாள் திருப்பலி நடைபெற்றது. அன்றைய நாள் SJSM அருட்சகோதரிகளின் patrons day கொண்டாடப்பட்டது. மார்ச் 12 ஆம் தேதி 11 மணி நேர ஆராதனை நடைபெற்றது.

## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம்– பாலப்பள்ளம்

மார்ச் 1 ஆம் தேதி முதல் தவக்கால விவிலியப் போட்டி தொடங்கியது. தவக்காலத்தில் சீரோமலபார் திருச்சபையில் ஒற்றுமை மற்றும் பங்கின் கருத்துக்களுக்காக ஒரு லட்சம் மங்களவார்த்தை ஜெபம் ஜெபிக்கும் முயர்ச்சியும் தொடர்ந்து நடைபெறுகிறது. இம் மாதம் எட்டாம் தேதி மறை வட்ட அளவில் நடைபெற்ற வாழ்க்கை வழிகாட்டி முகாமிலும் மார்ச் 6-ஆம் தேதி நடைபெற்ற உறவிய தலைவர்களுக்கான பயிற்சியிலும் இளையோருக்காக நடைபெற்ற தவக்கால தியானத்திலும் பங்கிலிருந்து திரளான மக்கள் பங்கெடுத்தார்கள். பங்கில் மார்ச் 19ஆம் தேதி தவக்கால தியானம், நற்கருணை ஆராதனை, மற்றும் ஒப்புரவு வழிபாடு ஆகியன நடைபெற்றன. அன்று இரவு உணவும் வழங்கப்பட்டது.

மார்ச் 20 ஆம் தேதி சூசை புரத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட வின்சென்ட்தியர்களின் வெள்ளி விழா விவிலிய பேழை மற்றும் வெள்ளிவிழா தீபத்திற்கு பங்களவில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. பங்குதந்தை ஜாண்பால் அவர்கள் அதனை பெற்று ஜெபித்தார்கள். மார்ச் இருபத்தி ஆறாம் தேதி 14 ஆலயங்களுக்குச் செல்லும் திருச்சிலுவைப் பயணம் நடைபெற்றது. அதில் சுமார் 60 பேர் பங்கெடுத்தனர்.

மார்ச் 31 தேதி குருசுமலை திருப்பயணம் நடைபெற்றது.

மார்ச் 19ஆம் தேதி பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது.

அதில் ஆனக்குழியில் சிறிய குருசடி ஒன்று நிறுவவும் பங்கு கணக்கில் மீதம் உள்ள தொகையை வைப்பு நிதியாக வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அதோடு தவக்கால திருநிகழ்வுகள் பற்றியும் ஆலோசித்து முடிவுகள் எடுக்கப்பட்டது.

பங்கில் செயல்பட்டு வந்த Christ the King, study centre இல் இந்த ஆண்டுக்கான அட்மிஷன் நடைபெற்றது.

## புனித வியாகப்பர் ஆலயம்– மாங்கரை

*03.03.3033* அன்று முதல் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் ஆலய வளாகத்தில் புதியதாக அமைத்த வேளாங்கண்ணி மாதா கெபியில் மாலை 5.45 மணிக்கு செபமாலையும் நடைபெற்று வருகிறது.

*04.03.2022* அன்று முதல் இளையோர்களுக்கென எல்லா வியாழக்கிழமைகளிலும் மாலை 6 மணிக்கு சிலுவைப்பாதையும், அதைத்தொடர்ந்து பங்குதந்தையின் ஆசீரும் இடம் பெறுகிறது.

*19.03.2022* அன்று புனித யோசேப்பின் திருநாளை முன்னிட்டு சிறப்பு திருப்பலியும், நவநாளும் நடைபெற்றது.

மார்ச் மாதத்தின் அனைத்து சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் உறவியங்களில் சிலுவைப்பாதை நடைபெற்றது. 16 வீடுகளாகப் பிரிக்கப்பட்டு இது நடத்தப்பட்டது. இறுதியில் பங்குதந்தையின் ஆசியும் இடம் பெற்றது.

## தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

*05.03.2022* அன்று பங்குதந்தை அவர்கள் தலைமையில் வஜன ஜோதி ஆரம்பமானது. விவிலியம், எரிகின்ற குத்துவிளக்கு, ஆகியவற்றை பங்குத்தந்தையும், அருட்சகோதரி ஆனி SABS அவர்களும் ஏந்திச் சென்று வஜன ஜோதி ஆரம்பிக்க இருந்த முதல் வீட்டில் ஒப்படைத்தனர். தொடர்ந்து விவிலியத்தின் தொடர் நிகழ்வுகளை பங்குத்தந்தை அவர்கள் விளக்கிக் கூறினார். வஜன ஜோதி இந்நாட்களில் வீடு வீடாக எடுத்துச் செல்லப்படுகிறது.

*13.02.2022* அன்று பங்குத்தந்தை தலைமையில் பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

*19.03.2022* அன்று பங்குதந்தை ஜோசப் தெக்கேகடுமத்தில் அவர்களின் பெயர் கொண்ட விழாவானது அனுசரிக்கப்பட்டது. அதன் கொண்டாட்டம் *20* ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

*27.03.2022* அன்று, குருசடியில் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. மேற்கூரை மாற்றி அமைக்கப்பட்டதை முன்னிட்டு, கூடார மந்திரிப்பும் சிறப்பு செபங்களும் ஏறெடுக்கப்பட்டன. இறுதியில் அனைவருக்கும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது.

## ▶ புனித லொரேட்டோ மாதா ஆலயம் – பிலாங்கரை

மார்ச் மாதம் *6* ம் தேதி அன்று திருப்பலிக்கு பிறகு தவக்கால ஆயத்தமாக அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களின் வழிகாட்டுதலில் அரைநாள் தியானம் நடைபெற்றது. அன்றைய தினம் பாவசங்கீர்த்தனமும் நடைபெற்றது.



தவக்கால சிறப்பு நிகழ்வாக "லொறேட்டோ அன்னையின் வீடுசந்திப்பு" திருப்பயணம் நடைபெற்றது. ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு உறவியத்திலும் உள்ள வீடுகளில் அன்னையின் சுரூபம் எடுத்து செல்லப்பட்டு சிறப்பு செபங்களும் வீடு மந்திரிப்பும் நடைபெற்றது.

ஒவ்வொரு உறவியத்திலும் அன்னையின் வீடு மந்திரிப்பு முடிந்த பிறகு ஞாயிற்றுக்கிழமைகளில் உறவிய

தியானம் நடைபெற்றது. அருட்தந்தை வினு மற்றும் அருட்தந்தை அஜின் அவர்கள் இந்த தியானங்களை வழிநடத்தினார்கள்.

மார்ச் மாதம் 13 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று சூசை புரம் மறைவட்டத்திலுள்ள இளையோர்களுக்காக தவக்கால தியானமும் பாவசங்கீர்த்தனமும் நடைபெற்றது. 80 க்கு மேல் இளையோர்கள் கலந்து கொண்டார்கள். மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை சுபின் அவர்கள் வழிகாட்டுதலில் இந்த தியானம் நடைபெற்றது. அருட்தந்தை றோபின்ஸ் அவர்கள் தியான உரை வழங்கினார்.

மார்ச் 19 சனிக்கிழமை அன்று புதிய கல்லறைத் தோட்ட வேலைகள் ஆரம்பமானது.

புனித வின்சென்ட தே பவுல் தக்கலை மத்திய சபையின் வெள்ளிவிழா வசனஜோதி பவனிக்கு 25-03-2022 வெள்ளிக்கிழமை அன்று பிலாங்கரை பங்கில் சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது.

## தென்காசி மறைத்தளம்

### தென்காசிமறைத்தள அருட்பணியார்களுக்கான கூட்டம்

தென்காசி மறைத்தளத்தில் பணியாற்றுகின்ற அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டமானது 2022, மார்ச் 12 ஆம் தேதி கேசவபுரம் எப்.சி.சி அருட்கன்னியர்களின் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் வருகை தந்து கூட்டத்தை பொறுப்பேற்று நடத்தினார்.

### Bibilica 2022



இளைஞர் இயக்கம் சார்பாக Bibilica 2022 போட்டிகள் மார்ச் 13 ஆம் நாள் புலரி மெட்ரிகுலேஷன் பள்ளி கூடத்தில் வைத்து நடத்தப்பட்டது. தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோஸப் சந்தோஷ் அவர்கள் வருகை தந்து குத்துவிளக்கு ஏற்றி போட்டிகளை துவக்கி வைத்தார். இதில் 92 மதிப்பெண்கள் பெற்று புளியரை ஆலயம் முதல் இடத்தையும், 21 மதிப்பெண்கள் எடுத்து மேக்கரை ஆலயம் இரண்டாவது இடத்தையும் 15 மதிப்பெண்கள் எடுத்து வாஞ்சி நகர் ஆலயம் மூன்றாவது இடத்தையும் பெற்று மகிழ்ந்தனர்.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

### சமூக நல்லிணக்க நாள்

சமூக நல்லிணக்க நாள் 26.03.2022 அன்று நாகர்கோவில் திருச்சிலுவை கல்லூரியில் வைத்து அனுசரிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு கத்தோலிக்க மறைமாவட்டப் பிரதிநிதிகளும் பங்கேற்ற நிகழ்வில் மற்ற ஆயர்களோடு தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் பங்கேற்றார்கள். அமைச்சர் திரு மனோ தங்கராஜ், நாகர்கோவில் மேயர் திரு மகேஷ், ஐயா பாலபிராஜபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நூர்முகம்மது, விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தைச் சார்ந்த திரு வன்னி அரசு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று உரையாற்றினர். கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு நசரேன் சூசை அவர்கள் தலைமையேற்றார்கள். இதில் சுமார் 1500 பேர் பங்கேற்றனர். இக்கூட்டமானது, மதங்களைத் தாண்டிய சமூக உணர்வும் பொறுப்புணர்வும் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும் என்றும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. அரியலூர் மைக்கிள்பட்டி பள்ளிக்கூடத்தில் நடந்த நிகழ்வுகளுக்கும் தவறான குற்றச்சாட்டுகளுக்கும் எதிர்வினை புரியும் பொருட்டும் இது நடத்தப்பட்டது.

| BIRTHDAY OF REV. FATHERS- APRIL - 2022 | |
|---|---|
| Fr. Antony Madapurackal | 01 |
| Fr. Abin Poovathumoottil | 01 |
| Fr. Vinu D. Joseph | 02 |
| Fr. Jimmy Thekkekadumathil | 04 |
| Fr. Ajeesh Attiyil | 08 |
| Fr. Josy Puthenpurayil | 14 |
| Bishop George Rajendran sdb | 14 |
| Fr. Dency Mundunadackal | 14 |
| Fr. Thomas Thekkethala CMI | 15 |
| Fr. Jacob Aiyammathra | 24 |

**திருவனந்தபுரம் லத்தீன் உயர்மறைமாவட்டத்திற்கு புதிய பேராயர்**

திருவனந்தபுரம் லத்தீன் உயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயராக மேதகு தோமஸ் ஜெ. நெட்டோ அவர்கள் அருட்பொழிவு செய்யப்பட்டு. பொறுப்பேற்றார். நிகழ்வானது *19.03.2022* அன்று செறுவெட்டுக்காடு பங்கில் வைத்து நடைபெற்றது. நமது ஆயர் நிகழ்வில் பங்கேற்றார்.

# BISHOP'S ENGAGEMENTS APRIL 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 11.00 am | Soosaipuram: Alphonsa College Meeting |
| 2 | Sat | 07.00 am | SABS: Holy Qurbana and Synaxis Orientation class |
| 3 | Sun | 10.00 am | Virudhanagar: Blessing of St Joseph's church |
| 4 | Mon | 10.00 am<br>06.00 pm | Sangamam: Priests conference<br>Sangamam: Catechism promoters meeting |
| 5 | Tue | 11.30 am<br>06.00 pm | Soosaipuram: Seminar at Alphonsa College<br>Sangamam: Meeting with Major Seminary Brothers |
| 6 | Wed | 10.00 am | Bishop's House: Curia Meeting \| Project meeting |
| 7 | Thu | 10.30 am | Online: Major Archiepiscopal Assembly meeting |
| 8 | Fri | 08.00 am<br>05.00 pm | Marthandam: 25 years Requiem Holy Qurbana<br>Bishop's House: Bishop's Recollection (Online) |
| 9 | Sat | 02.30 pm<br>06.30 pm | KKSSS: Felicitation to Newly elected ward members<br>Marthandam: The Passion: Sound and light play |
| 10 | Sun | 07.00 am<br>10.00 am | Thakkalivilai: Palm Sunday and Blessing of renovated Madubaha |
| 11 | Mon | 06.30 pm | Sangamam: Vestition and Minor Orders<br>Bishop's House: Meeting with Fathers |
| 12 | Tue | 10.00 am<br>05.00 pm | Bishop's House: Meeting with Fathers<br>Varuthattu: Diaconate Ordination |

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 13 | Wed | 09.30 am | Kalluvilai: Priests and Religious Recollection\| Priesthood day Holy Qurbana |
| 14 | Thu | 05.00 pm | Thirunelveli: Holy Thursday Holy Qurbana |
| 15 | Fri | 07.00 am<br>02.00 pm | Manjalumoodu: Good Friday Liturgy<br>Karode: Way of the Cross |
| 16 | Sat | 10.00 pm | Malaicode: Easter Holy Qurbana |
| 17 | Sun | 04.00 pm | EASTER SUNDAY |
| 18 | Mon | | Recollection |
| 19 | Tue | | Recollection |
| 20 | Wed | 09.30 am<br>06.00 pm | Annikarai: Priestly Ordination of Dn. Josemon Paul<br>Palapallam: Marriage Reception |
| 21 | Thu | 03.00 pm | Kumaragam: Marriage Holy Qurbana |
| 22 | Fri | 10.00 am | Thenkasi: Missionaries Meet |
| 23 | Sat | 02.30 pm | Padanthalumoodu: Priestly Ordination of Dn. Mahesh |
| 24 | Sun | 09.00 am<br>04.00 pm | Karode: First Holy Communion Holy Qurbana<br>Munchirai: Golden Jubilee Holy Qurbana |
| 25 | Mon | 10.00 am<br>06.00 pm | Sangamam: Priest's Conference<br>Thirumoolanagar: Feast day Vespers >>Ootty |

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 26 | Tue | 08.00 am | Ootty: TNBC Health Commission Secretaries meeting >>Changanassery |
| 27 | Wed | 09.00 am | Edathuva: Feast day Holy Qurbana>>Thuckalay |
| 28 | Thu | 10.30 am<br>04.00 pm | Azhagiamandabam: FCC Jubilee and final profession<br>Ampoori: Feast day Holy Qurbana and Parish day Celebration |
| 29 | Fri | 10.00 am<br>05.00 pm | Soosaipuram: St Alphonsa College Graduation day<br>Nagercoil>> Chennai |
| 30 | Sat | 04.00 pm | Chennai |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**

**தமிழ்நாடு ஆயர் பேரவைக்குப் புதிய தலைவர்கள்**

தமிழ்நாடு ஆயர் பேரவையின் தலைவராக பணியாற்றி வந்த, மதுரை பேராயர் மேதகு ஆன்டணி பாப்புசாமி மற்றும் துணைத்தலைவர், செங்கல்பட்டு ஆயர் மேதகு நீதிநாதன் ஆகியோரின் பணிக்காலம் 2022 ஜனவரி மாதம் நிறைவடைந்ததையொட்டி புதியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புதிய தலைவராக சென்னை-மயிலை பேராயர் மேதகு ஜார்ஜ் ஆன்டணிசாமி அவர்களும், புதிய துணைத்தலைவராக தர்மபுரி ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ் துரைராஜ் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தேர்தல் மதுரையில் பல்லோட்டைன் இல்லத்தில் வைத்து நடைபெற்றது.




SMYM (TYES), Life Orientation & Career Guidance, Manjalumoodu, 08.03.2022



St. Joseph's Feast, St. George Mission Parish, Anayadi, 19.03.2022



Kuzhandai Iso Iyakkam, St. Joseph's Feast & Meeting, 20.03.2022

SMYM
Leadership Training,
Kalluvilai
06.03.2022









Catechism
Bible Fest,
Puthur, Tenkasi
Mission
13.02.2022

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570